**கவனிக்க** .- 2015.02.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.
**கவனிக்க** .- 2010.06.28 ஆந் திகதியில் இருந்து 2013.12.31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான மிருக வைத்தியர்களின் பெயர்ப்பட்டியலொன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி VI இல் ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1902 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13
*1902 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 22 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில்

வழக்கு இல. : எச். சீ. (சிவில்) 55/14/சீ. ஓ.

பாணந்துறை, கெசெல்வத்த, பன்சல் வீதி, 289/112 எனும் இடத்தில் அமைந்துள்ள ஏசியன் டிரேடிங் அன்ட் மார்கடிங் (பிறைவேட்) லிமிட்டெட் முடிவுறுத்தல் சம்பந்தமான விடயமாகும்.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 219(1) மற்றும் 270 (இ) மற்றும் (ஈ) ஆகிய உப பிரிவுடன் குறிப்பிட வேண்டிய 272(1) என்ற பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் கணக்கு வழக்கு முடிக்கப்பட்டு மூடுவதற்கான வேண்டுதல் பற்றிய விடயமாகும் ;

ஏசியன் டிரேடிங் அன்ட் மார்கடிங் (பிறைவேட்) லிமிட்டட்,
289/112, பன்சல வீதி,
கெசெல்வத்த, பாணந்துறை.

- மனுதாரர்-

மேற்படி பெயர் கொண்ட கம்பனியை முடிவுறுத்துவதற்காக 2014, திசெம்பர் 15 ஆந் திகதி மனுவொன்று கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றில் மேற்படி பெயருடைய மனுதாரர் சார்பாக சட்டத்தரணி பிரியலால் சிறிசேனவினால் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. அது பற்றிய 2015, மாச்சு 13ஆந் திகதி மேற்படி நீதிமன்றில் விசாரணைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதுபற்றி மேற்படி கம்பனியின் கடன்பெற்றவர் அல்லது நிவாரணம் பெறுபவர் அல்லது மேற்படி மனுவின் மேலும் ஆணை பிறப்பிக்கும்போது அந்த வேண்டுதலுக்கு விருப்பு அல்லது எதிர்ப்பை தெரிவிப்பதற்கு விரும்புவதாயின் அவ்வாறான ஏதாவது இரு கடன் பெற்றவர் அல்லது நிவாரணம் பெற்றவரால் தனிப்பட்ட முறையில் ஆஜராக அல்லது சட்டத்தரணி மூலம் அதற்காக ஆஜராக வேண்டும் அத்துடன் மேற்படி கம்பனியின் எவராவது கடன் பெற்றவர் அல்லது நிவாரணம் பெற்றவருக்கு மனுவின் பிரதிகள் குறித்த கட்டணத்தை செலுத்தியதன் பின்பு கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சட்டத்தரணி பிரியலால் சிறிசேன
மனுதாரரின் சட்டத்தரணி.
238/10, பாடசாலை மாவத்தை,
கந்துகொட, தெல்கொட.

**குறிப்பு**.- ஏதேனும் ஒரு நபர் மேற்படி மனு பற்றிய விசாரணைக்கு சமுகமளிக்க எதிர்பார்ப்பின் அதுபற்றி சட்டத்தரணி பிரியலால் சிறிசேனவுக்கு எழுத்துமூல அறிவித்தலை ஒப்படைத்து அல்லது தபால் மூலம் அறிவிப்பதுடன், அந்த அறிவித்தலை ஏதேனும் தனி நபருக்கு எனில், பெயர் மற்றும் முகவரி, நிறுவனமொன்றுக்கு எனில் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியை குறிப்பிட்டு தனி நபரால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவர்களது சட்டத்தரணி (இருப்பின்) மூலம் ஒப்பமிட்டு ஒப்படைப்பதுடன், தபாலில் அனுப்புவதாயின் தேவைப்படும் கால எல்லையுடன் 2015, மாச்சு 12 ஆந் திகதி பி. ப. 6.00 இற்கு முன் மேற்படி பெயர் குறிப்பிடப் படும் சட்டத்தரணிக்கு ஒப்படைத்தல் வேண்டும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

2-299